# INTERNATIONAL JOURNAL OF CURRENT RESEARCH AND ACADEMIC REVIEW

ISSN - 2347 - 3215

VOL-13 SUPPLEMENT-5
SEPTEMBER-2025



www.ijcrar.com

EP JOURNALS

# ST. ANNE'S ARTS AND SCIENCE COLLEGE

GNT Road, Madavaram, Chennai – 600 110

(Affiliated to the University of Madras)

## International Journal of Current Research and Academic Review

### INTERNATIONAL CONFERENCE

### Nature and Spirituality Through the Lens of Literature

### இலக்கியக் கண்ணோட்டத்தில் இயற்கையும் ஆன்மீகமும்

**SAASC-NSTLL-25**

**19 th SEPTEMBER 2025**







**Chief Patron**

Rev. Mother Dr. Leema Rosario SSAM

Chairperson

**Convenor**

Dr.I.Annammal Arputhamary

Principal

**Conference Organizing Secretary**

Smt.M.R.Benedict Kumari

Dean of College Development

**ORGANISED BY**

IQAC & Department of English and Tamil

VOL - , SUPPLEMENT -
SEPTEMBER 2025

ISSN NO - 2347 - 3215

# International Conference
# On Nature and Spirituality
# through the Lens of Literature;
# இலக்கியக் கண்ணோட்டத்தில்
# இயற்கையும் ஆன்மீகமும்

**on**

**19th September, 2025**

International Journal of Current Research and Academic Review

**ORGANIZED BY**

**IQAC, Departments of English & Tamil.**

## ST. ANNE'S ARTS AND SCIENCE COLLEGE

**GNT Road, Madavaram, Chennai – 600 110**

**ISO 9001:2015 CERTIFIED INSTITUTION**

**(Affiliated to the University of Madras)**

# ST.ANNE'S
# ARTS AND SCIENCE COLLEGE

G.N.T ROAD, PONNIAMMANMEDU MADAVARAM, Chennai - 600110

ISO 9001:2015 CERTIFIED INSTITUTION

(Affiliated to the University of Madras)

## INTERNATIONAL CONFERENCE
## ON
## NATURE AND SPIRITUALITY THROUGH THE LENS OF LITERATURE

## இலக்கியக் கண்ணோட்டத்தில் இயற்கையும் ஆன்மீகமும்

(SAASC-NSTLL-25)

**19.09.2025 - FRIDAY**

**Organized by**
**Department of English and Tamil**



THE MANAGEMENT, STAFF AND STUDENTS OF

ST. ANNE'S ARTS AND SCIENCE COLLEGE

Cordially invite you to grace the Inaugural Function of our

## INTERNATIONAL CONFERENCE

*on*

**Nature and Spirituality through the Lens of Literature**

**இலக்கியக் கண்ணோட்டத்தில் இயற்கையும் ஆன்மீகமும்**

**SAASC-NSTLL-25**

Inaugural Function : 19.09.2025@ 9.30 AM

Venue : MOTHER GNANAMMA CONFERENCE HALL

**Rev. Mother Dr. Leema Rosario**

**Chairperson**

ST. ANNE'S ARTS AND SCIENCE COLLEGE

has kindly consented to deliver the Inaugural Address

**Chief Guest**

**Mr. Joshua S. Fujiyoshi**
Lecturer of Happy Science
Happy Science Academy
Japan

**Ms. Reena Osaki**
Lecturer of Happy Science
& Meditation teacher
Happy Science Academy
Japan

has kindly consented to deliver the Presidential Address

**Smt. M.R. Benedict Kumari**
Dean College Development

**Dr. I. Annammal Arputhamary**
Principal

# ST. ANNE'S ARTS AND SCIENCE COLLEGE

GNT Road, Madavaram, Chennai – 600 110
(Affiliated to the University of Madras)

## International Conference On Nature and Spirituality through the Lens of Literature; இலக்கியக் கண்ணோட்டத்தில் இயற்கையும் ஆன்மீகமும்

**IJCRAR 2025**

**19th, September, 2025**

## INVITED FULL LENGTH ARTICLES - TAMIL

| | | | |
|---|---|---|---|
| | | பரவசமும் | |
| IJCRAR/FLT/25 | ஆ.சித்ரா | சித்தர் இலக்கியத்தில் இயற்கை மற்றும் ஆன்மீகம் | 467 |
| IJCRAR/FLT/26 | க.கிருத்திகா | இயற்கைக் காட்சிகளும் ஆன்மிகச் செய்திகள் | 477 |
| IJCRAR/FLT/27 | ச. கிருத்திகா | கம்பராமாயணத்தில் இயற்கை வர்ணனை | 481 |
| IJCRAR/FLT/28 | மு. தபசும் | சீறாப்புராணத்தில் இயற்கை வர்ணனை | 484 |
| IJCRAR/FLT/29 | பா. தேவி ஸ்ரீ | சேக்கிழாரின் தெய்வ நெறிமுறைகள் | 488 |
| IJCRAR/FLT/30 | ப. பாரதிதாசன் | இயற்கை வழியில் ஆன்மீக மருத்துவம் | 492 |
| IJCRAR/FLT/31 | ப.தெய்வரேவதி | திருஞானசம்பந்தர் பதிகத்தில் இயற்கை வழி ஆன்மீகக் கருத்துக்கள் | 497 |
| IJCRAR/FLT/32 | முனைவர் ம.பிரபாவதி | பெரிய புராணம் காட்டும் திருவாரூர் | 506 |
| IJCRAR/FLT/33 | S.ஸ்ரீ. ரூபா | திருமூலரின் திருமந்திரத்தின் ஆன்மிகப் பங்கு | 513 |
| IJCRAR/FLT/34 | ரா. ரோஷினி | தேவாரத்தின் பக்தி நெறிகள் | 516 |
| IJCRAR/FLT/35 | வி.மோனிகா யாழினி | கலித்தொகையில் கடவுளரும் காட்சி வருணனையும் | 521 |
| IJCRAR/FLT/36 | அ. இரா. அறிவொளி, முனைவர் ம. பிரபாகரன் | கல்கியின் பொன்னியின் செல்வனில் ஆன்மீக சிந்தனை | 531 |
| IJCRAR/FLT/37 | முனைவர் கா.சந்தானலெட்சுமி | வீரயுக நாயகன் வேள்பாரியில் தொல்குடிகளின் போரியல் நடைமுறைகள் | 540 |
| IJCRAR/FLT/38 | அ. தனலட்சுமி, முனைவர் ம. பிரபாகரன் | இசையமைப்பாளர் இளையராஜாவின் ஆன்மிகச் சிந்தனைகள் | 546 |
| IJCRAR/FLT/39 | த.அஷியா ஷினாஸ் | திருக்குற்றாலக் குறவஞ்சி இயற்கை வளங்களின் விளக்கமும் இலக்கியப் | 555 |

Int.J.Curr.Res.Aca.Rev.2025; 13(S5): 1-886

International Journal of Current Research and Academic Review
ISSN: 2347-3215 Volume 13 Supplement 5 (September-2025)
Journal home page: http://www.ijcrar.com
INDEXED IN INDEX COPERNICUS - ICI Journals Master List 2022 - IJCRAR--ICV 2022: 81.15

EXCELLENT PUBLISHERS

Full Length Article IJCRAR/FLT/38

# இசையமைப்பாளர் இளையராஜாவின் ஆன்மிகச் சிந்தனைகள்

அ. தனலட்சுமி[1], முனைவர் ம. பிரபாகரன்[2*]

[1]முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்), தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம்,சென்னை– 117

[2]உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, நாட்டு நலப்பணி திட்ட ஒருங்கிணைப்பாளர்,வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம்,சென்னை–117.

## முன்னுரை:

மனித இனம் உருவாகி வளர்ச்சிபெறத் தொடங்கியக் காலத்தில் தங்களைப் பண்படுத்திக் கொள்வதற்காகப் பின்பற்றப்பட்ட முறைகளில் முதன்மையானது வழிபாடு என்பதாகும். இந்த வழிபாடு என்பது தொடக்கக் காலத்தில் உருவ வழிபாடாக இல்லாமல் இயற்றை வழிபாடாகத்தான் தொடக்கம்பெற்றது. மனித இனத்தினர் தாங்கள் கண்ட இயற்கையின் மீது ஏற்பட்ட அச்சம் என்பது வழிபாடாக மாற்றம் பெற்றது. இந்நிலையில் உருவானதுதான் மக்களிடையே இன்றும் உள்ள சூரியன், சந்திரன் உள்ளிட்ட இயற்கையின் மீதான வழிபாடாகும். இவற்றைத் தொடர்ந்து பல்வேறுநிலைகளில் வழிபடும் முறைமைகள் உருவானது.

தமிழ் இலக்கியங்களில் தொன்மையான சங்க இலக்கியங்களில் ஒவ்வொரு நிலத்தில் வாழ்ந்த மக்களும் ஒரு தெய்வத்தைக் கொண்டு வழிபட்ட நிலைகளைக் காண முடிகிறது. இவ்வாறு இயற்கையையும், ஒவ்வொரு நிலத்திற்கும் ஒரு கடவுளைக் கொண்டு வழிபட்டுவந்த மக்களிடையே ஒரு சமய உருவாக்கம்

International Journal of Current Research and Academic Review
ISSN: 2347-3215 Volume 13 Supplement 5 (September-2025)
Journal home page: http://www.ijcrar.com
INDEXED IN INDEX COPERNICUS - ICI Journals Master List 2022 - IJCRAR--ICV 2022: 81.15

ஏற்பட்டு வைதீகச் சமயமாகக் கட்டமைக்கப்பட்டு, அச்சமயங்களின் முதன்மையான தெய்வங்களாக சிவன், திருமால் எனும் கடவுள்கள் வழிபாட்டிற்குரிய தெய்வங்களாக்கப்பட்டன. சங்க காலத்திற்குப் பிறகு சமணம், பௌத்தம், சைவம், வைணவம் என்னும் சமயங்களும் வழிபடும் கடவுள்களும் இருந்தாலும் கி.பி. ஏழாம் நூற்றாண்டிற்குப் பிறகு வேத ஆகமங்களை அடிப்படையாகக் கொண்ட சைவ, வைணவ வழிபாட்டு மரபு உருவானது குறிப்பிடத்தக்க வழிபாட்டு மரபாகும். வைதீக மரபு என்பது மனிதனைப் பக்குவப் படுத்துவதற்கான பல்வேறு மரபுகளை அடிப்படையாகக் கொண்டு இயங்கின. இந்த மனித இயக்கத்தைத்தான் "ஆன்மீகம்" என்கிறோம்.

மனிதன் தன்னையும் தன்னைச் சுற்றியுள்ள சமூகத்தையும் பக்குவப்படுத்துவதற்குக் கண்டுபிடிக்கப்பட்ட முக்கியமான ஒன்றுதான் ஆன்மிகம் என்பதாகும்.

## ஆன்மிகம் – விளக்கம்

ஆன்மிகம் என்பது ஆன்மாவுடன் தொடர்புடைய விடயங்களைக் குறிக்கும். மனிதத்தின் அனைத்தும் கடந்த இயல்பையும் நோக்கத்தையும் குறிப்பன. இது மனிதர்களைப் பொருள் சார்ந்த, உயிரியலோடு தொடர்புடைய ஓர் உயிரினமாக மட்டும் கருதாமல், பொருள்சார் உலகையும் காலத்தையும் கடந்ததாகக் கருதப்படும் ஒன்றோடு தொடர்புபட்டவையாகவும், ஐம்புலன்கள் கடந்ததாகவும் கருதுகின்றன. ஆன்மிகம் என்பது, உடல், ஆன்மா என்பவற்றுக்கு இடையிலான வேறுபாட்டைக் குறிக்கும் மனம் - உடல் இருமைத் தன்மையையும் உணர்த்துகிறது. இதனால், ஆன்மிகம் என்பது, பொருள் சார்ந்த உலகியல் விடயங்களுடன் முரண்பட்டதாகக் கருதப்படுகிறது. ஆனால் மனம் கடந்த பெருநிலையை உணர்த்துவது ஆன்மிகம் ஆகும். இத்தகைய ஆன்மிக நிலையில் இசைஞானி இளையராஜா அவர்களின்
சிந்தனைகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

International Journal of Current Research and Academic Review
ISSN: 2347-3215 Volume 13 Supplement 5 (September-2025)
Journal home page: http://www.ijcrar.com
INDEXED IN INDEX COPERNICUS - ICI Journals Master List 2022 - IJCRAR--ICV 2022: 81.15

## இளையராஜாவின் பார்வையில் ஆன்மிகம்

உலக உயிர்கள் உயர்வு பெறுவதற்காக கண்டெடுக்கப்பட்ட பாதை ஆன்மிகம் என்னும் பாதையாகும். இந்த ஆன்மிக நெறியைக் குறித்து பல மகான்களும், அறிஞர்களும் பல்வேறு நிலைகளில் கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளனர். அவற்றிலிருந்து வேறுபட்டும், நுட்பமான கருத்தாகவும் இளையராஜா அவர்களின் கருத்து உள்ளதை,

"ஒரு மனிதனுக்கு உடல் இருக்கிறது. உடலுக்குத் தேவைகளையெல்லாம் பூர்த்தி செய்து உடல் சுகத்தை அனுபவிக்கிறது. கண்ணால் பார்க்கிறோம். பார்க்கும் காட்சிகள் அழகாக இருந்தால், மனத்திற்கு இதமாக இருக்கிறது. காதால் இனிய இசையைக் கேட்கிறோம். அதுவும் மனதிற்குச் சுகமாக இருக்கிறது. கைகளால் மென்மையான பொருளை தொட்டுணரும்போது தொடுகின்ற அந்த உணர்வு இதமாக இருக்கிறது. வாயால் உண்கிறோம். அந்த சுவை நாவிற்கு ருசியானால் மகிழ்ச்சியாக இருக்கிறது. இப்படி ஓர் உடலில் இருக்கும் எல்லா உறுப்புகளும் ஒவ்வொரு சுகத்தை அனுபவிக்க விஷயங்கள் உலகத்தில் இருக்கின்றன. ஆனால் அறிவால் நாம் அனுபவித்துச் சுகப்படக் கூடிய விஷயமே ஆன்மிகம்"1

மேற்காணும் கருத்துகளின் மூலம் அறியலாம். இந்த உலக உயிர்கள் தம்முடைய அறிவால் நாம் அனுபவித்து உயர்வு பெறுவதற்கான ஒரே வழி ஆன்மிகம்தான் என்பதை ஆன்மிக நெறிக்கான இலக்கணமாக வைப்பதின் மூலம் இளையராஜா அவர்களின் தெளிவான ஆன்மிகச் சிந்தனையை உணர்ந்துகொள்ளலாம்.

## இளையராஜா அவர்களின் இசையும் ஆன்மிக உருவாக்கமும்

இளையராஜா அவர்கள் இசை உலகில் தமிழகம் மட்டுமின்றி இந்திய அளவில் ஒரு அடையாளமாக விளங்குபவர். திரைப்படத்திற்கான இசையமைப்பிலும் ஒரு ஆன்மிகத்தைக் கண்டடைந்தவர். அதனுடைய அடுத்த

International Journal of Current Research and Academic Review
ISSN: 2347-3215 Volume 13 Supplement 5 (September-2025)
Journal home page: http://www.ijcrar.com
INDEXED IN INDEX COPERNICUS - ICI Journals Master List 2022 - IJCRAR--ICV 2022: 81.15

பரிமாணம்தான் திருவாசகத்திற்கு சிம்பொனி இசையமைத்து உலகிற்கு தமிழ்ச் சமூகத்தின் ஆன்மிக வரலாற்றையும் சிறப்பையும் எடுத்துக்காட்டியது எனலாம். இந்த திருவாசகத்தில் மாணிக்கவாசகர் ஆன்மிகம் என்பதற்கான இலக்கணத்தைப் போன்று சிவபெருமான் மீது தான் கொண்ட பக்தி நெறியை வெளிப்படுத்தும்போது,

“சிந்தனைநின் தனதாக்கி நாயி னேன்தன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியையும் புலன்க ளார
வந்தனை ஆட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தனிய னேற்கே”2

என்ற பாடலின் மூலம் இறைவனின் திருப்பாதங்களையே தன்னுடைய சிந்தையின் மூலமாகக் கொள்ள வேண்டும் என்பதை மாணிக்கவாசகர் நுட்பமாகக் குறிப்பிடுவதைக் காணலாம்.

இளையராஜா அவர்கள் மாணிக்கவாசகர் குறிப்பிடுவதைப் போன்று, தான் கொண்ட இறைவன் மீதான ஆன்மிகப் பக்தியை மிக அற்புதமாக வெளிப்படுத்துவதை,

“பிறவியெனும்
அந்தரத்தில்
தொடங்கினேன்!
இறைவன்
எனும்
ஆதியில்
அடங்கினேன்”3

Int.J.Curr.Res.Aca.Rev.2025; 13(S5): 1-886

EXCELLENT PUBLISHERS

International Journal of Current Research and Academic Review

ISSN: 2347-3215 Volume 13 Supplement 5 (September-2025)

Journal home page: http://www.ijcrar.com

INDEXED IN INDEX COPERNICUS - ICI Journals Master List 2022 - IJCRAR--ICV 2022: 81.15

எனும் தன் கவிதைப் படைப்பின் மூலம் அறிந்துகொள்ளலாம். இறைவன் என்பவன் ஆதியானவன். அந்த ஆதிப் பரம்பொருளில் அடங்குவதே மனிதப் பிறவி என்பதை தன்னுடைய ஆன்மிகச் சிந்தனையாக எடுத்துக் காட்டியிருப்பது இளையராஜா அவர்கள் கொண்ட ஆன்மிக உச்சநிலையை அறிந்துகொள்ளச் செய்கிறது.

## இறைவன் ஒருவனே

இளையராஜா அவர்களின் ஆன்மிகச் சிந்தனையை நுட்பமாக ஆராய்ந்து காணும்போது, இறைவன் மீது கொண்ட அளவற்ற பக்தியையும் அதன் அடிப்படையில் அவரின் ஆன்மிகத் தன்மையும் எளிதாக உணர முடியும். இவற்றிற்கு எடுத்துக்காட்டாக தான் படைத்த உண்மைக்கு திரை ஏது? எனும் படைப்பில்

“சலியாத மனம் வந்தால்
உன்மேல் அன்பு எப்படி?
என்பதை அவர்
யோசித்திருக்கமாட்டாரா?
நான் யோசித்தேன்
ஒன்று மட்டும்
வேண்டுமென்றால்
மற்ற ஏதும்
வேண்டாமென்று தானே
அர்த்தம்?
சரி சரி!
மற்றவை நமக்கெதற்கு?”4

எனும் கவிதையில் “மற்றவை நமக்கெதற்கு” என்ற ஒற்றை வரியில் உலக அனைத்துப் பொருள்களும், அனைத்து இன்பங்களும் இறைவனிலும் இறைவன் மீது கொண்ட ஆன்மிகத்திலும் அடக்கம் என்பதை மிக எளிமையாகவும் நுட்பமாகவும் இளையராஜா அவர்கள் உணர்த்துவதைக் காணலாம்.

International Journal of Current Research and Academic Review
ISSN: 2347-3215 Volume 13 Supplement 5 (September-2025)
Journal home page: http://www.ijcrar.com
INDEXED IN INDEX COPERNICUS - ICI Journals Master List 2022 - IJCRAR--ICV 2022: 81.15

## படைத்தவனை மட்டுமே எண்ணிப் பார்த்தல்

உலகில் வாழும் மக்கள் தங்களைப் படைத்த இறைவனை நினையாமல் உலகில் அழியக்கூடி பொருள்களையும், நிலையாத இன்பத்தையும் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். மனத்தால் நிலையானவற்றை நினைக்காமல் நிலையற்றவைகளையெல்லாம் எண்ணி அலைகழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இவை மனிதர்கள் கொள்ள வேண்டிய சிந்தனை இல்லை. மனிதர்கள் மட்டுமல்லாமல் உலக உயிர்கள் அனைத்தும் சிந்தையில் கொள்ள வேண்டிது உலக உயிர்களைப் படைத்த பரம்பொருளை மட்டுமே என்பதை தன்னுடைய ஆன்மிகச் சிந்தனையாகக் கொண்டுள்ளதை,

> "தானே சுழன்று தனைச்சுற்றும் கோள்களோடு
> வானே வியக்க வருமழகுச் சூரியரே
> வீணே சுழன்றுதையா வெற்றெண்ணக் கூட்ட மென்னை
> சோணேர்க் கிட்டமோ சொல்லு"5

என்ற பாடலில் விளக்குகிறார். இப்பாடலின் மூலம், தன்னுடைய மனமும் ஏராளமான எண்ணத் தொகுதிகளால் அலைகழிக்கப்படுவதாக எண்ணுவதையும், படைத்தவனை எண்ணிப் பாராது உலகில் உள்ள பொருள்களைப் பற்றித் தன் மனம் அலைபாய்வது ஆண்டவனுக்கு சம்மதமோ? என்று கேட்கப்படுவதையும் காணும்போது மனம் இறைவன் மீது மட்டும் கட்டுண்டு இருக்க வேண்டும் என்பதே இளையராஜா அவர்களின் சிந்தனையாக, ஆன்மிகமாக உள்ளதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

## யாதுமாகி நின்றாய்

இளையராஜா அவர்கள் ஆன்மிகத்தை மிக நுட்பமாக பற்றியிருக்கிறார் என்றுதான் கூற வேண்டும். எவ்வாறெனில், உலக உயிர்கள் தான், தனது என்னும் மனநிலையில் தன்னைப் படைத்தவனை எண்ணாமல் உலகில் உள்ள பொருள்களையே தங்களுடைய இன்பத்திற்கான பொருள்களாகக் கருதும் நிலையில், அந்த உலகப் பொருள்களும் இறைவனே என்றும், இறைவனுக்கு

EXCELLENT PUBLISHERS
International Journal of Current Research and Academic Review
ISSN: 2347-3215 Volume 13 Supplement 5 (September-2025)
Journal home page: http://www.ijcrar.com
INDEXED IN INDEX COPERNICUS - ICI Journals Master List 2022 - IJCRAR--ICV 2022: 81.15

ஒப்பான ஒரு பொருள் உலகில் இல்லையென்றும் இளையராஜா அவர்கள் உணர்கிறார். இவை இளையராஜா அவர்களின் ஆன்மிகச் சிந்தனைக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இவற்றை, “இறைவா, நீ ஒப்பற்றவன், உன்னைவிட்டுச் சுவையற்ற இல்வாழக்கையை பெரிதாக எண்ணினேன். ஆசை, ஆணவம், அகந்தை ஆகியவற்றை ஊட்டி வளர்த்தேன். அந்தோ! எப்படித்தான் இப்படிச் செய்தேனோ? ... நீ ஒருவனே நிலையானவன். இவ்வுலகத்தோடு பொருந்தாமல் உள்ளத்தால் விலகியிருந்தாலும் உடலால் அதனோடே ஒட்டியுள்ளேன். உலகத்தையெல்லாம் தோற்றுவித்து ஆட்டுவிக்கும் உன்னைவிட்டு விலகி விடுவேனோ யான்? ”6

என்று வெளிப்பத்துவதன் மூலம், இறைவன் என்பவன் எல்லாமுமாகி நிற்கும் கோட்பாட்டை தன்னுடைய ஆன்மிகச் சிந்தனையாக இளையராஜா அவர்கள் கொண்டிருப்பதைக் காணலாம்.

## சிவ நெறியும் இளையராஜாவின் ஆன்மிகச் சிந்தனையும்

இளையராஜா அவர்கள் இசையில் மட்டும் தன்னுடைய உள்ளத்தைச் செலுத்தவில்லை. ஆன்மிகத்திலும் தன் உள்ளத்தைச் செலுத்தி இன்பம் கண்டவர். இத்தன்மையினால்தான் திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் மீது 108 வெண்பாப் பாடலைப் பாடி தம்முடைய ஆன்மிகப் பக்தியை வெளிப்படுத்தியுள்ளார். இவற்றை,

“கண்ணாய் கருத்தாய் கரம்தொழுதற் காசானாய்
உண்ணார் விருந்தாய் உயிர்க்கோர் உறுமருந்தாய்
எண்ணார் மனத்துள் எழுந்திருந்தாலும் என்னரசே
எண்ணா திழிந்தேன் எதற்கு”7

என்ற பாடலால் விளக்குகிறார். மேலும், சிவம் என்றால் என்ன? என்ற வினாவை எழுப்பிக்கொண்டு இளையராஜா அவர்கள் கொடுக்கும் விடையைக் காணும்போது,

“சிவம் என்பது – என்ன?
சிவம் என்ற வார்த்தை அன்று!

Int.J.Curr.Res.Aca.Rev.2025; 13(S5): 1-886

EXCELLENT PUBLISHERS

International Journal of Current Research and Academic Review

ISSN: 2347-3215 Volume 13 Supplement 5 (September-2025)
Journal home page: http://www.ijcrar.com
INDEXED IN INDEX COPERNICUS - ICI Journals Master List 2022 - IJCRAR--ICV 2022: 81.15

அல்லது
அந்தக் கேள்விக்கு சொல்லப்படுகின்ற பதில் அன்று
அல்லது
யாருடைய பதிலினாலாவது
இந்தக் பதில்தான் இந்தக் கேள்விக்குச் சரியான பதிலாகும்
என்று நாம் எடுத்துக் கொள்ளும் முடிவும் அல்ல!
எந்தக் கேள்வியாலும்,
பதிலாலும் விசாரணையாலும்
நாம் அடைய முடியாத சமாதானம்.
உணர்வையே உணர்வால் உணர்வது!
ஞானத்தையே ஞானத்தால் உணர்வது
அன்பையே அன்பால் உணர்வது!
அறிவையே அறிவால் உணர்வது
அதற்கு அப்பால் அறிய ஒன்றுமில்லாதது
அதுவே 'சிவம்' எனப்படும் கடவுள்"8

என்று குறிப்பிடுவதன் மூலம் இளையராஜா அவர்களின் உச்சநிலையிலான ஆன்மிகச் சிந்தனையை உணரால். திருமூலம் குறிப்பிட்டதைப் போன்று "அன்பே சிவம்" என்ற ஆன்மிகச் சிந்தனை இளையராஜா அவர்களின் பக்குவப்பட்ட மனநிலையை உணர்த்துகின்றது. சிவபெருமான் மீது கொண்ட பக்தி என்பது அன்பாலும், ஞானத்தாலும், உணர்வாலும், அறிவாலும் உணரக் கூடியது என்பதை தன்னுடைய ஆன்மிக நெறியாக இளையராஜா அவர்கள் கொண்டு தம்முடைய வாழ்வின் மூலம் சிறந்ததொரு ஆன்மிக நெறியை வெளிப்படுத்துவதற்கு அவர் படைத்த இலக்கியப் படைப்புகளே மிகச் சிறந்த சான்றுகளாக விளங்குகின்றன.

## முடிவுரை

இளையராஜாவின் இலக்கியப் படைப்புகள் ஒவ்வொன்றும் அவர்கொண்ட ஆன்மிகத் தத்துவத்தை வெளிப்படுத்தி நிற்பதை, அவருடைய இலக்கியங்களை வாசிக்கும்போது புலப்படுகிறது. இவருடைய படைப்புகளின் மூலம் ஆன்மிகம்

EXCELLENT PUBLISHERS
International Journal of Current Research and Academic Review
ISSN: 2347-3215 Volume 13 Supplement 5 (September-2025)
Journal home page: http://www.ijcrar.com
INDEXED IN INDEX COPERNICUS - ICI Journals Master List 2022 - IJCRAR--ICV 2022: 81.15

என்றால் என்ன?, ஆன்மிக நெறியால் இவ்வுலக உயிர்கள் பெறும் இன்பம் யாது?, ஆன்மிகப் பொருளான சிவத்தை எவ்வாறெல்லாம் உணரலாம்? முதலான பல வினாக்களுக்கு விடையறியலாம். இவ்விடைகள் இளையராஜாவின் நுட்பமான ஆன்மிகச் சிந்தனைக்கான சான்றுகளாகும்.

## சான்றெண் விளக்கம்

1. இசைஞானி இளையராஜா, யாருக்கு யார் எழுதுவது?, ப. 252.
2. மாணிக்கவாசகர், திருவாசப்பாடல்.
3. இசைஞானி இளையராஜா, உண்மைக்குத் திரை ஏது?, ப. 77.
4. மேலது, ப. 10.
5. இசைஞானி இளையராஜா, யாதுமாகி நின்றாய்… , ப. 101.
6. மேலது, பக். 57,58.
7. மேலது, ப.107.
8. இசைஞானி இளையராஜா, யாருக்கு யார் எழுதுவது?, ப. 501.